CPA
CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# 4/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலினை சவாலுக்குள்ளாக்கும் இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள்

**இலங்கை அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மீறல்**

*22 ஜனவரி 2018:* 2054-42 ஆம் இலக்க விசேட வர்த்தமானி இன் 4/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் வலிதாந்தன்மையினை சவாலுக்கு உட்படுத்தி இன்று இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட இவ் அறிவித்தலானது 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதியன்று நிதி மற்றும் ஊடக அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்டது. 4/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலானது:

(அ) 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு மதுபான உற்பத்தி, மதுபான சேகரிப்பு, மதுபானத்தை போத்தலில் அடைத்தல், மதுபானத்தை விற்றல் அல்லது கொண்டு செல்லுதல் ஆகியவற்றினைச் செய்வதற்கு காணப்பட்ட தடை

(ஆ) 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு மதுபான உற்பத்தி, மதுபான சேகரிப்பு, மதுபானத்தை போத்தலில் அடைத்தல், மதுபானம் விற்றல் அல்லது கொண்டு செல்லுதல் ஆகிய தொழில்களில் ஈடுபடுவதற்கு காணப்பட்ட தடை

(இ) பெண்களுக்கு சத்திர (tavern) வளாகத்திற்குள் மதுபானம் வழங்குவதற்கு காணப்பட்ட தடை

ஆகிய தடைகளை மீள அறிமுகம் செய்துள்ளது.

இவ் அறிவித்தலானது இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட சில உரிமைகளை மீறுவதாக அமைகின்றது என்ற அடிப்படையில் இவ்விரண்டு அடிப்படை உரிமை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பெண்கள் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடினும், ஈடுபடாவிடினும் அத்தெரிவினைச் செய்வதற்கான அவர்களுடைய அரசியலமைப்பு ரீதியான உரிமை ஆண்களுடைய உரிமையைப் போலவே சமமான முறையில் மதிக்கப்பட வேண்டும் என்பதே இவ்விரண்டு மனுக்களினதும் பொதுவான நிலைப்பாடாகும்.

முதலாவது மனுவினை பொதுநல அக்கறையுடனான ஐந்து பெண்கள் இணைந்து தாக்கல் செய்துள்ளனர். பவானி பொன்சேகா, சுமிகா பெரேரா, அனுஷா குமாரசுவாமி, ஷ்ரீன் சரூர் மற்றும் மினோலி டி சொய்சா ஆகியோரே இவ் ஐந்து பெண்களாவார். இவ் ஐந்து மனுதாரர்களும் குறிப்பிட்ட 4/2018 இலக்க மதுவரி அறிவித்தலானது அரசியலமைப்பின் உறுப்புரை 10 (சிந்தனை செய்வதற்கான சுதந்திரம்), உறுப்புரை 12 (2) (ஓரங்காட்டுதலின்மை) மற்றும் உறுப்புரை14(1)(எ) (சட்டரீதியான தொழிலொன்றில் ஈடுபடுவதற்கான உரிமை) ஆகிய உறுப்புரைகளின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அவர்களுடைய உரிமைகளை மீறுவதாக வலியுறுத்துகின்றனர்.

இரண்டாவது மனுவானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினாலும் (CPA) அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரினாலும் பொது நல அக்கறையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது குறிப்பிட்ட தடையானது அரசியலமைப்பின் உறுப்புரை 10, 12(1) மற்றும் 12(2)என்பனவற்றின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, இலங்கையில் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகின்ற 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனுபவிப்பதற்கு தடையாக அமைகின்றது என சார்த்துகைச் செய்கின்றது.

**சர்வதேச மற்றும் தேசிய உடன்பாடுகள்**

அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படுகின்றமைக்கு மேலதிகமாக, இத்தடையானது இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்தரப்பட்ட

உடன்பாடுகளுக்கு முரணானது ஆகும். குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தம் (ICCPR) மற்றும் பெண்களுக்கு எதிரான எல்லா வகையான ஓரங்காட்டுலையும் நீக்குவது பற்றிய சமவாயம் (CEDAW) ஆகியன இத்தகைய சில பிரதான உடன்பாடுகளாகும். CEDAW சமவாயமானது பெண்களுக்கு எதிரான எல்லா விதமான ஓரங்காட்டுதல்களையும் சர்வதேச சட்டத்தின் மீறலொன்றாகவே கருதுகின்றது. CEDAW சமவாயத்திற்கான குழுவின் 2017 ஆம் ஆண்டின் இலங்கைக்கான அறிக்கையிலே உள்ள இரண்டு விதந்துரைகளானவை பெண்களுக்கு எதிரான ஓரங்காட்டுதலினைத் தடுக்கின்ற சட்டங்கள் நடைமுறையில் உள்ளதை உறுதிப்படுத்தும்படியும், ஏலவே நடைமுறையிலுள்ள சட்டங்கள் இச்சமவாயத்துடன் இணங்குகின்றன என்பதனை உறுதிப்படுத்தும்படியும் கோருகின்றன. மேலும் அவ் அறிக்கையானது சமத்துவம் மற்றும் ஓரங்காட்டுதலின்மை ஆகிய உரிமைகளுக்கு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் CEDAW சமவாயத்திலுள்ள அனைத்து உறுப்புரைகளும் அமுல்படுத்தப்படுகின்றன என்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் விதந்துரைத்துள்ளது.[1]

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விரிவானத் திட்டத்தினை குறிப்பிடுகின்ற தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் 2017-21 (NHRAP) ஆனது பாலின சமத்துவத்தினை பிரதான கருப்பொருளாக உள்ளடக்கியுள்ளது. NHRAP ஆனது 'அரசாங்கம் தற்போது பாலின கூர்தன்மையுள்ள சட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களை ஆக்குவதன் மூலமாக பாலின சமத்துவத்தினை அடைந்து கொள்வதற்காக செயற்பட்டு வருகின்றது' என்பதனை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் இலங்கை 2017 ஆம் ஆண்டு மே மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச்சலுகையினை மீண்டும் பெற்றுக்கொண்டது. இச்சலுகைத் திட்டமானது CEDAW உள்ளடங்கலான 27 சர்வதேச சமவாயங்களுடன் அதிகளவில் உடன்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்கின்ற பொருட்களுக்கான வரியினை பெருமளவாக குறைத்தது.

இறுதியாக, இலங்கையானது 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) ஏற்றுக்கொண்டது.[2] இவ் இலக்குகளிலே 5 ஆவது இலக்காக 'பாலின சமத்துவத்தினை அடைதல் மற்றும் அனைத்து பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் அதிகாரமளித்தல்' என்பது அமைகின்றது. இவ் இலக்கானது, அனைத்து வகையான ஓரங்காட்டுதல்களையும் முடிவுக்கு கொண்டு வருதல் (5.1) மற்றும் கொள்கைகள், சட்டவாக்கங்கள் என்பன பாலின சமத்துவத்தினை விருத்தி செய்கின்றன என்பதனை உறுதிப்படுத்தல் (5.c) போன்றனவற்றை உள்ளடக்குகின்றது. இலங்கை அரசாங்கமானது அதனுடைய இலக்குகளுக்குரிய உடன்பாடுகளை, தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் மற்றும் அரசாங்கக் கொள்கைகள் உள்ளடங்கலான தனது பல்வேறுபட்ட உள்நாட்டுச் செயன்முறைகளினூடாக வலியுறுத்தியுள்ளது. இவை சர்வதேச தொடர் கண்காணிப்பிற்கு உட்படும் என்பதுடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்குரிய உடன்பாடுகள் எதிர்வருகின்ற வருடங்களில் மதிப்பீடு செய்யப்படும்.

[1] CEDAW Country Report 2017 para 12.

[2] United Nations Resolution A/RES/70/1